# வேளாண்மை அறிவியல் மையம்

## கீழ்நெல்லி, திருவண்ணாமலை மாவட்டம்

**(மத்திய அரசுசார் நிறுவனம்)**

**<u>மாண்புமிகு பாரதப் பிரதமர் மகளிர் சுய உதவிக் குழுக்களிடையே கலந்துரையாடல்</u>**

மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் காணொலி மூலம் மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கிடையே கலந்துரையாடிய காணொலி நிகழ்வு கீழ்நெல்லி வேளாண் அறிவியல் மையத்தின் மூலமாக விவசாயிகள் மற்றும் பண்ணை மகளிருக்காக நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டது. இந்நிகழ்வின் போது பாரதப்பிரதமர் அவர்கள் பண்ணை மகளிர் மூலம் வேளாண்மையில் எவ்வாறு ஒத்துழைப்பு வழங்குவது, சுய உதவிக் குழுக்கள் உதவியுடன் மதிப்பு கூட்டுதல் மூலம் வருமானம் ஈட்டக்கூடிய தொழில் வாய்ப்புகள், வங்கிகள் மூலம் கடன் உதவி பெறும் வழிமுறைகள் மேலும் மதிப்பு கூட்டுதல் மூலம் வெற்றி பெற்ற பண்ணை மகளிர் என மாநிலம் தோறும் சில முக்கிய மகளிர் குழு உறுப்பினர்களிடையே கலந்துரையாடினார். மேலும் குழுமகளிருக்கு ஏற்படும் பிரச்சனைகள் மற்றும் தீர்க்கும் வழிமுறைகள் குறித்தும் கலந்தாலோசித்தார்.

பாரதப்பிரதமரின் உரையை தமிழாக்கம் செய்து திருமதி மார்க்ரெட் தொழில் நுட்ப வல்லுநர் (மனையியல்) சுயஉதவிக்குழு மற்றும் விவசாயிகளிடையே உரையாற்றினார். மேலும் செய்யாறு பகுதியில் மதிப்பு கூட்டுதல் மூலம் வருமானம் தரக்கூடிய தொழில் வாய்ப்புகள் பற்றி விரிவாக விளக்கினார். மேலும் நிகழ்ச்சியின் போது திரு.பி.நாராயணன், தொழில் நுட்ப வல்லுநர் (பயிர் பாதுகாப்பு) தேனீ வளர்ப்பு குறித்த பயிற்சி மற்றும் செயல் விளக்கம் விவசாயிகளுக்கு செய்து காண்பித்தார். முன்னதாக இந்நிகழ்ச்சிக்கு வருகை தந்த அனைவரையும் திரு. ந. ரமேஷ்ராஜா முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர் வரவேற்று இந்நிகழ்ச்சியின் நோக்கம் மற்றும் பண்ணை மகளிருக்காக வேளாண் அறிவியல் மையம் செய்த செயல்களை பட்டியலிட்டார். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை திரு.வே.சுரேஷ் தொழில் நுட்ப அலுவலர் (வேளாண் விரிவாக்கம்) செய்திருந்தார். நிகழ்ச்சியில் வெம்பாக்கம் வட்டார சுயஉதவிக் குழு உறுப்பினர்கள் மற்றும் விவசாயிகள் சுமார் 85 பேர் கலந்து கொண்டனர்.



16 • வேலூர் 13.7.2018

தினகரன் திருவண்ணாமலை

செய்யாறு அருகே

# மகளிர் குழுக்களின் கலந்துரையாடல் நிகழ்ச்சி

செய்யாறு, ஜூலை 13: செய்யாறு அருகே வெம்பாக்கம் தாலுகாவில் உள்ள கீழ் நெல்லி வேளாண் அறிவியல் மையத்தில் பாரத பிரதமர் காணொலி காட்சி மூலம் மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கிடையே கலந்துரையாடிய நிகழ்வு விவசாயிகள் மற்றும் பண்ணை மகளிருக்காக நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டது.



▶ செய்யாறு அருகே கீழ்நெல்லி வேளாண் அறிவியல் மையத்தில் பிரதமர் காணொலி காட்சி மூலம் மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கிடையெ கலந்துரையாடிய காணொலி நிகழ்வுகள் பண்ணை மகளிருக்காக நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டது.

அப்போது, பாரத பிரதமர் பண்ணை மகளிர் மூலம் வேளாண்மைக்கு எவ்வாறு ஒத்துழைப்பு வழங்குவது, சுய உதவிக்குழுக்கள் உதவியுடன் மதிப்பு கூட்டுதல் மூலம் வருமானம் ஈட்டக்கூடிய தொழில் வாய்ப்புகள், வங்கிகள் மூலம் கடன் உதவி பெறும் வழிமுறைகள் குறித்து கலந்துரையாடினார். மேலும் குழு மகளிருக்கு ஏற்படும் பிரச்னைகள், அதை தீர்க்கும் வழிமுறைகள் குறித்தும் கலந்துரையாடினர். வேளாண்மை மையத்தின் தொழில்நுட்ப வல்லுநர் மார்க்ரெட் பிரதமரின் உரையை தமிழாக்கம் செய்தார். தொழில்நுட்ப வல்லுநர் நாராயணன் தேனீ வளர்ப்பு குறித்து செயல்விளக்கம் செய்து காண்பித்தார். முன்னதாக நிகழ்ச்சிக்கு வந்தவர்களை முதுநிலை விஞ்ஞானி ரமேஷ்ராஜா வரவேற்றார். இதில் வெம்பாக்கம் வட்டார சுய உதவிக்குழு உறுப்பினர்கள், விவசாயிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.